# முன் பிள்ளைப் பருவ விருத்தி டிப்ளோமா கற்கை நெறி 2012/2013
# தேசிய கல்வி நிறுவகம்

தேசிய கல்வி நிறுவக, முன் பிள்ளைப் பருவ விருத்தி டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.முன்பிள்ளைப் பருவ விருத்தி நிலையங்களை நடாத்திச் செல்வோரும் முன் பிள்ளைப் பருவ நிலையங்களை நடத்த எதிர்பார்ப்போரும் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

**தகைமைகள்**

விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
நன்னடத்தையும் நல்லாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
**31.03.2012** அன்று 45 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

**கல்வித் தகைமைகள்**

க.பொ.த உயர் தரத்தில் மூன்று(3) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை**

நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**கற்கை நெறியின் தன்மை**

ஒரு வருட கற்கை நெறியாகும்.

**கற்கை நெறிக்கட்டணம்**

கற்கை நெறிக்கட்டணம் 15,000/= (பதினையாயிரம் ரூபாய்) ஆகும். இதனை மூன்று தவணைகளில் செலுத்த முடியும்.

வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் விரிவுரைகளும் செயற்பாடுகளும் நடைபெறும். அத்துடன் இக்கற்கை ஒப்படைகள், செயன்முறைக் கற்பித்தற் பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இக்கற்கை நெறிக்காக வரையறைக்குட்பட்ட தொகையினரே ஆட்சேர்க்கப்படுவர்.
விண்ணப்பதாரி தனது சுய விபரங்களை உள்ளடக்கித் தயாரித்த விண்ணப்பப்படிவத்தை,**பணிப்பாளர் நாயகம், தேசியகல்வி நிறுவகம், மகரகம** எனும் முகவரிக்கு **15.02.2012** அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **முன் பிள்ளைப் பருவ விருத்தி டிப்ளோமா கற்கை நெறி 2012/2013** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பேராசிரியர்.டபிள்யூ.எம்.அபயரத்ன பண்டார**
**பணிப்பாளர் நாயகம்**